රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව.
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை.
Independence Square, Colombo 07, Sri Lanka.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | CS/SLAS/Vacancies - Reply (Vol – I) | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி<br>Date | 2023.06.19 |

இலங்கை நிர்வாக சேவையின் I ஆந் தர உத்தியோகத்தர்களுக்கான அறிவித்தலாகும்.

## இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் பதவிக்கு இரண்டாம் நிலை அடிப்படையில் இணைப்புச் செய்தல்

மேற்படி விடயம் தொடர்பாக இந்த அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட 2023.02.27 ஆந் திகதிய அறிவித்தலுடன் தொடர்புடையது.

02. பாதிக்கப்பட்ட நபர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீடுகள் தொடர்பிலான கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்தும் போது முன்னெடுக்கப்படும் இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் பதவிக்கு இரண்டாம் நிலை அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவரை இணைப்புச் செய்தலுடன் தொடர்புடையதாக வெளியிடப்பட்ட மேற்படி அறிவித்தல் பின்வருமாறு திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்குமாறு இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் OFR/ADM/Dir/2019-2022 மற்றும் 2023.04.21 ஆந் திகதிய கடிதத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

02.(vi). அனுபவம் - பட்டம் பெற்றதன் பின்னர் அரசாங்க அல்லது அரச நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியில் குறைந்த பட்சம் 10 வருட கால அனுபவமுள்ள இலங்கை நிர்வாக சேவையின் அல்லது இலங்கை திட்டமிடல் சேவையின் உத்தியோகத்தராக இருத்தல்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| දුරකථන<br>தொலைபேசி<br>Telephone | 011-2696211-13<br>011-2166000 | ෆැක්ස්<br>தொலைநகல்<br>Fax | 011-2695279 | ඊ-මේල්<br>மின்னஞ்சல்<br>E-mail | info@pubad.gov.lk | වෙබ් අඩවිය<br>இணையத்தளம்<br>Website | www.pubad.gov.lk |

03. அதற்கமைய, இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் பதவியில் இணைவதற்கு விருப்பத்தை தெரிவிக்கும் மேற்குறிப்பிட்ட தகைமையுடைய இலங்கை நிர்வாக சேவையின் அல்லது இலங்கை திட்டமிடல் சேவையின் உத்தியோகத்தர்கள் இருப்பின், அவ்வுத்தியோகத்தர்களுக்கு இது தொடர்பில் எழுத்து மூலக் கோரிக்கையொன்றுடன், தனது சுயவிபரத் தரவுக் குறிப்புடன் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கும் இறுதித் திகதியான .2023.06.30 ஆந் திகதிக்கு முன்னர் திருத்தியமைக்கப்படுவதோடு, இந்த விண்ணப்பத்தை குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

04. அப்பதவிக்குரிய பொறுப்புக்கள் மற்றும் அது குறித்த மேலதிக தகவல்கள் தேவைப்படின், " பணிப்பாளர் நாயகம் - இழப்பீட்டுக்கான அலுவலகம்" - “011-2883939/ 011-2883935” இடம் வினவுமாறு தயவுடன் அறியத்தருகிறேன்.

ஒப்பம்./ பி.டப்ளியூ. ராஜபக்ஷ

மேலதிகச் செயலாளர் (பொது நிர்வாகம்)

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின்

செயலாளருக்குப் பதிலாக

தொலைபேசி இலக்கம்: 0112-698605

தொலைநகல் இலக்கம்: 0112-683651

மின்னஞ்சல் முகவரி : pubad.dslas@gmail.com

பிரதிகள்:-

01. பணிப்பாளர் நாயகம், இழப்பீட்டுக்கான அலுவலகம்